**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் (பொ) செயல்முறைகள்**

**ந.க..எண்.3135/ஆ5/2025, நாள்.18/08/2025**

*****

பொருள் பள்ளிக் கல்வி – 2025–2026ஆம் கல்வி ஆண்டு கல்வி இணை / கல்விசாரா மன்றச் செயல்பாடுகள் – சிறார் திரைப்பட மன்ற பள்ளி அளவிலான போட்டிகள் நடத்துதல் – வழிகாட்டு நெறிமுறைகள் – சார்ந்து

பார்வை

1. சென்னை – 6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.034785/எம்/இ1/2025, நாள். 30.06.2025 மற்றும் 24.07.2025
2. சென்னை – 6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.034785/எம்/இ1/2025, நாள். 11.08.2025

*****

பார்வை 1ல் காணும் பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகளில், 2025–2026ஆம் ஆண்டில் 6 முதல் 9ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு மகிழ் முற்றம் மாணவர் குழுக்கள் வாயிலாக பள்ளிகளில் மாதந்தோறும் சிறார் திரைப்பட மன்றம் சார்ந்து மேற்கொள்ள வேண்டிய செயல்பாடுகள் குறித்து வழிகாட்டு நெறிமுறைகள் வழங்கப்பட்டுள்ளது.

பார்வை 2–ல் காணும் 11.08.2025 நாளிட்ட பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகளின்படி, 2025–2026ஆம் ஆண்டிற்கான சிறார் திரைப்பட மன்றம் பள்ளி அளவிலான போட்டிகளை பின்வருமாறு நடத்திட அரசு நடுநிலை / உயர்நிலை / மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

| **பிரிவு** | **வகுப்பு** | **போட்டிகளின் எண்ணிக்கை** |
|---|---|---|
| பிரிவு I | வகுப்பு 6 & 7 | 3 |
| பிரிவு II | வகுப்பு 8 | 3 |
| பிரிவு III | வகுப்பு 9 | 3 |

1. பள்ளி அளவிலான சிறார் திரைப்பட மன்றப் போட்டிகளை 20.08.2025 **முதல்** 22.08.2025 **வரை திட்டமிட்டு நடத்திடல் வேண்டும்.** போட்டிக்கான தலைப்புகள், போட்டிக்கான மதிப்பீட்டு வழிமுறைகள் ஆகியவை இணைப்புகளாக கொடுக்கப்பட்டுள்ளது.
2. மேலே அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு பள்ளி அளவிலான போட்டிகள் நடைபெறுவதை சிறார் திரைப்பட மன்றப் பொறுப்பாசிரியர் உறுதி செய்தல் வேண்டும்.
3. ஒவ்வொரு பிரிவிலும் உள்ள போட்டிகளில் பங்கேற்கும் மாணவர்களின் பெயர் பட்டியல் பெறப்பட்டு அவை முறையாக EMIS தளத்தில் பதிவேற்றம் செய்யப்படுதல் வேண்டும். பின்னர் ஒவ்வொரு பிரிவிற்குமான போட்டிகளை திட்டமிட்டு நடத்தி அன்றைய தினமே வெற்றியாளர்களை அறிவித்திடல் வேண்டும்.
4. பங்கேற்பாளர்கள் மற்றும் வெற்றியாளர்களின் விவரங்கள் 25.08.2025–குள் EMIS தளத்தில் பதிவேற்றம் செய்யப்படுதல் வேண்டும்.
5. பள்ளி அளவிலான போட்டிகளை குறிப்பிடப்பட்டுள்ள காலவரையறைக்குள் திட்டமிட்டு நடத்தி முடித்து EMIS தளத்தில் பதிவேற்றம் செய்வதற்கான அனைத்து முயற்சிகளையும் சார்ந்த பள்ளித் தலைமையாசிரியர் மேற்கொள்ள வேண்டும்.
6. 6 முதல் 9ஆம் வகுப்பு வரை உள்ள அனைத்து மாணவர்களையும் பள்ளி அளவிலான சிறார் திரைப்பட மன்றப் போட்டிகளில் அவரவர் பிரிவில் பங்கேற்க சிறார் திரைப்பட மன்றப் பொறுப்பாசிரியர் மாணவர்களை ஊக்குவித்தல் வேண்டும். பள்ளி அளவில் அவரவர் பிரிவில் நடைபெறும் ஏதேனும் ஒரு போட்டியிலாவது ஒவ்வொரு மாணவரையும் பங்கேற்க செய்தல் வேண்டும்.

பள்ளி அளவில் நடைபெற உள்ள சிறார் மன்றப் போட்டிகளை மேற்குறிப்பிட்ட வழிகாட்டுதல்கள் பின்பற்றி திட்டமிட்டு நடத்திட அனைத்து அரசு நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

பள்ளி அளவிலான சிறார் மன்றப் போட்டிகள் பள்ளிகள் நடத்தப்பட்டு, பங்கேற்பாளர்கள் மற்றும் வெற்றியாளர்களின் விவரங்கள் 25.08.2025-குள் EMIS தளத்தில் பதிவேற்றம் செய்துள்ளதை உறுதி செய்யுமாறு மாவட்ட ஒருங்கிணைப்பாளருக்கு (DC) தெரிவிக்கப்படுகிறது.

மாவட்டக் கல்வி அலுவலர்கள், உதவித் திட்ட அலுவலர், வட்டாரக் கல்வி அலுவலர்கள், மாவட்ட பள்ளித் துணை ஆய்வாளர், மாவட்ட ஒருங்கிணைப்பாளர் மற்றும் அனைத்து ஆசிரியர் பயிற்றுநர்கள் ஆகியோர் மேற்காணும் வழிகாட்டு நெறிமுறைகள் பின்பற்றி பள்ளி அளவில் சிறார் திரைப்படம் மன்றப் போட்டிகள் செயல்படுவதை உறுதி செய்யுமாறு தெரிவிக்கப்படுகிறது.

வட்டாரக் கல்வி அலுவலர்கள் மற்றும் வட்டார வளமைய மேற்பார்வையாளர் இணைந்து அனைத்து நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு வட்டார அளவிலான கூட்டத்தினை நடத்தி உரிய வழிகாட்டுதல்களை வழங்கி அவர்களை குறிப்பிட்ட காலவரம்பிற்குள் பள்ளி அளவிலான போட்டிகளை திட்டமிட்டு நடத்தி முடித்திட எடுத்துரைத்தல் வேண்டும்.

பள்ளி அளவிலான போட்டிகள் நடைபெறும் போது மாவட்ட மற்றும் வட்டார அளவிலான அனைத்து அலுவலர்களும் பள்ளி பார்வை மேற்கொள்ள அறிவுறுத்தப்படுகிறது.

இணைப்பு –

1. பள்ளி அளவிலான சிறார் திரைப்பட மன்றப் போட்டிக்கான தலைப்புகள்
2. சிறார் திரைப்பட போட்டிகளை நடத்துவதற்கான வழிகாட்டு நெறிமுறைகள்

முதன்மைக் கல்வி அலுவலர் (பொ),
வேலூர்.

பெறுநர் –

1. மாவட்டக் கல்வி அலுவலர்கள்,
   (இடைநிலை / தொடக்கக் கல்வி)
   வேலூர் மாவட்டம்.
   (இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக)
2. தலைமையாசிரியர்கள்,
   அனைத்து அரசு நடுநிலை / உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகள்,
   வேலூர் மாவட்டம். (இவ்வலுவலக இணையதளம் மூலமாக)

நகல்–

1. சென்னை – 6, பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களுக்கு
   தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
2. உதவி திட்ட அலுவலர்,
   ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி,,
   காந்திநகர்,
   வேலூர் மாவட்டம். (இவ்லுவலக மின்னஞ்சல் மூலமாக)
3. வட்டாரக் கல்வி அலுவலர்கள்,
   வேலூர் மாவட்டம். (மாவட்ட கல்வி அலுவலர் (தொடக்கக் கல்வி) மூலமாக)
4. பள்ளித் துணை ஆய்வாளர்கள்,
   (முதன்மைக் கல்வி அலுவலகம் / மாவட்டக் கல்வி அலுவலகம் (இடைநிலை)
   வேலூர் மாவட்டம் (உரிய அலுவலர் மூலமாக)
5. மாவட்ட ஒருங்கிணைப்பாளர்,
   உதவி திட்ட அலுவலகம், காந்திநகர்
   வேலூர் மாவட்டம். (உதவி திட்ட அலுவலர் மூலமாக)
6. வட்டார வளமைய மேற்பார்வையாளர்கள், வேலூர் மாவட்டம்.
7. ஆசிரியர் பயிற்றுநர்கள், வேலூர் மாவட்டம்.

# இணைப்பு –1 – சிறார் திரைப்பட மன்ற பள்ளி அளவிலான போட்டிகள் & தலைப்பு 2025–26

| வ எண் | போட்டிகள் | கால அளவு | மதிப்பெண்கள் வழங்குவதற்கான கூறுகள் | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | கதை & வசனம் | | | | | |
| | "ஒரு நாள் பள்ளித் தலைமையாசிரியராக நான்" என்ற 3 நிமிட படத்திற்கு வசனங்களுடன் கதையை எழுதுங்கள். | 45 நிமிடங்கள் | திரைப்படத்தின் கருப்பொருள் மற்றும் பொருளடக்கம் (30 மதிப்பெண்கள்) | கதை மாந்தர்களை உருவாக்குதல் மற்றும் வளர்த்தல் (25 மதிப்பெண்கள்) | கதையோட்டம் (20 மதிப்பெண்கள்) | வசன நேர்த்தி (25 மதிப்பெண்கள்) |
| 2 | ஒளிப்பதிவு | | | | | |
| | "எனது பள்ளியைச் சுற்றியுள்ள பல்வேறு வகையான மரங்கள் மற்றும் அவற்றின் முக்கியத்துவம்" என்ற தலைப்பில் இரண்டு நிமிட திரைப்படத்தை உருவாக்குங்கள். | 1 மணி 30 நிமிடங்கள்<br><br>ஒளிப்பதிவு செய்யப்பட்ட விஷயங்களை எடிட் செய்து, இசை சேர்த்து (தேவைப் பட்டால் மட்டும்) கொடுக்கப்பட்டுள்ள ஒன்றரை மணி நேரங்களுக்குள் அனைத்தையும் முடிக்க வேண்டும் | காட்சித்தரம் (நிலையான சட்டகம் (Static shot), ஓடும் சட்டகம் (Running shot), ஜூம் உள்ளே (Zoom–in) , காட்சி திருப்பம் (Visual–Plan) (25 மதிப்பெண்கள்) | ஒளிப்பதிவிற்கான விளக்குகள் பயன்பாடு (இயற்கை – Natural, செயற்கை –Artificial, அறைகளில் – Room) (25 மதிப்பெண்கள்) | எப்படி கதை மற்றும் கருத்தை சொல்வது. (25 மதிப்பெண்கள்) | ஒளிப்பதிவு கருவியின் கோணங்கள் வழியாக உணர்வுகளை கடத்துவது (விரிந்த (Wide angle), இடை (Mid–angle), அருகில் (Close–up) (25 மதிப்பெண்கள்) |
| 3 | நடிப்பு | | | | | |
| | நடிப்பிற்கு தேவையான பொருளையும், உடன் நடிக்கும் நபரையும் பயன்படுத்தி "உங்கள் கிராமத்தில் நீங்கள் போற்றும் அல்லது உங்களுக்கு பிடிக்கும் ஒரு நபரைப் போல" நடிக்கவும். | 45 நிமிடங்கள்<br><br>(தனி நபராக நடிக்கின்ற மாணவரோடு மற்ற நபர்கள் யார் நடித்தாலும் மதிப்பெண் தனி நபராக நடிக்கும் மாணவருக்கு மட்டும் வழங்கப்படும்) | உணர்வுகளை சிறப்பாக வெளிக் கொணர்தல் – (30 மதிப்பெண்கள்) | கதை மாந்தர்களை குறிப்பிடுவது (25 மதிப்பெண்கள்) | காட்சிகளுக்கு தகுந்தாற் போல குரலை சரியாக பயன்படுத்துவது (20 மதிப்பெண்கள்) | இடத்தை சரியாக பயன்படுத்துவது கதாப்பாத்திரத்தை உணர்ந்து நடிப்பது (25 மதிப்பெண்கள்) |

| இணைப்பு 2 – பள்ளி அளவிலான சிறார் திரைப்பட மன்ற போட்டிகள் 2025-26 | | |
|---|---|---|
| வ எண் | போட்டிகள் | வழிகாட்டு நெறிமுறைகள் |
| 1 | கதை & வசனம் | 1. தலைப்புக்குரிய கதையினை தேர்ந்தெடுக்க வேண்டும்.<br>2. 3 நிமிடத்துக்குறிய கதையாய் இருக்க வேண்டும்.<br>3. கதைக்கான சூழல், கதாபாத்திரங்கள் குறித்து புரிதல் வேண்டும்.<br>4. கதாபாத்திரங்களின் உரையாடல்களை தெளிவுப்படுத்த வேண்டும்.<br>5. கதை வசனத்தை கொடுக்கப்பட்டுள்ள 45 நிமிடங்களுக்குள் எழுதி முடிக்க வேண்டும். |
| 2 | ஒளிப்பதிவு | 1. எந்தக் காட்சி எப்பொழுது எடுக்கப்படவேண்டும் என்பதை திட்டமிடுவது.<br>2. எந்தக் காட்சி மிக அவசியமானது என்பதை தெரிந்து எடுக்க வேண்டும்.<br>3. ஒளிப்பதிவு செய்யும் போது எந்த நிகழ்வை நீண்ட தொலைவில், நடுவில், தொலைவில், அருகில், மிக அருகில், (Long shot, Mid, Wide, Close-up), எது தேவையற்றது என்பதை எடுக்கும்போது முடிவு செய்யலாம்.<br>4. திரைப்படத்திற்கு தேவையான கட்டம், காட்சி, கோணம், நகர்வு (Shot, Scene, Angle, Movement) ஆகியவை தெரிந்திருந்தால் நல்லது.<br>5. காலை, பகல், மாலை, இரவு இவைகளுக்கான வெளிச்சக்கூறுகள் தெரிந்திருத்தல் நலமே.<br>6. கதையின் தொடர்ச்சிக்காக எடுக்கப்பட்ட காட்சிகளை கவனமாக தவறாமல் குறித்துக்கொள்ள வேண்டும்.<br>7. எடுக்கப்படவேண்டிய காட்சிக்கு தேவையான பொருட்கள், கதாபாத்திரங்கள், உடை, ஒப்பனை ஆகியவை திட்டமிடப்படவேண்டும்.<br>8. காட்சிகளை அலைபேசியில் எடுக்க வேண்டும்.<br>9. ஒளிப்பதிவு செய்யப்பட்ட விஷயங்களை எடிட் செய்து, இசை சேர்த்து (தேவைப் பட்டால் மட்டும்) கொடுக்கப்பட்டுள்ள ஒன்றரை மணி நேரங்களுக்குள் அனைத்தையும் முடிக்க வேண்டும். |
| 3 | நடிப்பு | கொடுக்கபபட்டுள்ள தலைப்பை பொறுத்து தேவைப்பட்டால் நடிப்பதற்க்குரிய இடம், பொருள்கள், நடிகர்கள் முன்கூட்டியே தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.<br>2. அதற்க்கு தொடர்புடைய வசனங்கள் இருந்தால் தயார்நிலையில் இருக்க வேண்டும்.<br>3. உங்களுக்கு தரப்பட்டுருக்கும் நேரம் 45 நிமிடங்கள். இதில் 42 நிமிடங்கள் நடிப்பிற்கான தயாரிப்பிற்கு பயன்படுதிக்கொள்ள வேண்டும்... அடுத்துள்ள 3 நிமிடங்களுக்குள் நடிப்பை முடிக்க வேண்டும்.<br>4. கதையின் கருப்பொருள் மாறாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.<br>5. தனி நபராக நடிக்கின்ற மாணவரோடு மற்ற நபர்கள் யார் நடித்தாலும் மதிப்பெண் தனி நபராக நடிக்கும் மாணவருக்கு மட்டுமே வழங்கப்படும். |